செ.வெ.எண்: 793/2025 நாள்: 24.09.2025

**சேலம் மாவட்டத்தில் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சேலம் மாவட்டத்தில் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க மத்திய அரசினால் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையம் ஆகஸ்டு 2018 முதல் சேலம் மாவட்டத்திலும் பிப்ரவரி 2024 முதல் ஆத்தூர் வட்டாரத்திலும் மொத்தமாக சேலம் மாவட்டத்தில் 2 மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது சேலம் மாவட்டத்தில் உள்ள 2 சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்திலும் உள்ள காலி பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். மேற்படி பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆத்தூரில் செயல்படும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலிப்பணியிடமாக உள்ள ரூ.35000/- தொகுப்பூதியத்துடன் மைய நிர்வாகி பணியிடத்திற்கு சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் முதுகலைப்பட்டம் (MSW/Counselling Psychology) கல்வி தகுதி பெற்றிருக்க வேண்டும். மைய நிர்வாகி பணியிடத்திற்கு வயதுவரம்பு 27 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். முன் அனுபவமாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு, தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 4 வருடபணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

மேலும், சேலம் மற்றும் ஆத்தூரில் செயல்படும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலிப்பணியிடமாக உள்ள வழக்குபணியாளர் பணியிடத்திற்கு (சேலம்-2, ஆத்தூர்-5) ரூ.18,000/- தொகுப்பூதியத்துடன் கல்வி தகுதி சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் இளங்கலை /முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். வழக்குபணியாளர்

பணியிடத்திற்கு வயதுவரம்பு 23 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு, தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 2 வருடபணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

ஆத்தூரில் செயல்படும் சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலிப்பணியிடமாக உள்ள ரூ.10000/- தொகுப்பூதியத்துடன் பல்நோக்கு உதவியாளர் (ஆத்தூர்-1 ) பணியிடத்திற்கு கல்வி தகுதி 8 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பல்நோக்கு உதவியாளர் (ஆத்தூர்-1 ) பணியிடத்திற்கு வயதுவரம்பு 21 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். நிர்வாக அமைப்பின் கீழ் பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். நன்கு சமையல் தெரிந்த பெண் சமையளராக இருக்க வேண்டும். 24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணி அமர்த்தப்படும். உள்ளூரைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விருப்பமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுய விபரங்களை 10.10.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், அறை எண்.126 என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem